# ரிதிமாலியத்த பிரதேச சபை
# பதுளை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 21 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மே 08 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஆகஸ்ட் 05 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ரிதிமாலியத்த பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டிற்குரிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 1,542,150 தொகை நீதிமன்றத் தண்டப்பணமாகவும், மீளாய்வாண்டிற்குரிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 170,350 தொகை முத்திரைக் கட்டண வருமானமாகவும் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 171,913 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 71,493 தொகையான முத்திரைக் கட்டணம் என்பன கணக்கு வைக்கப்படாமையினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய வருமானம் கடன்பட்டோர் அல்லது திரண்ட

நிதியக் கணக்கு மீதி ரூபா 243,406 இனால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் யூலை, ஆகஸ்ட், செப்தெம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்காகக் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் மீளாய்வாண்டின் ஒக்தோபர் தொடக்கம் திசெம்பர் வரை கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் என்பன இனங்காணப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பின்னடைவான உள்ளூராட்சி நிறுவனங்களை முன்னேற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புதிய பிரதேச சபை அலுவலகக் கட்டிட நிர்மாண செயற்திட்டத்தின் முதலாம் கட்டத்திற்காக நான்கு சந்தர்ப்பங்களின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 4,136,575 தொகையான செலவினங்களைக் கணக்கு வைக்காமையினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணி மற்றும் கட்டிடத்தின் பெறுமதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதி என்பன அதே பெறுமானத்தினால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 12,756,250 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,190,526 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 437,209 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 1 | - | - |
| (ii) | வாடகை | 1,545 | 1,264 | 28 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 715 | 787 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 16,965 | 2,635 | 4,512 |

### 2.2.2 வாடகை

2009 ஆம் ஆண்டின் போது மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் வாடகை அறவிடப்படாமல் 2009 திசெம்பர் 30 ஆந் திகதிய பொதுக்கூட்டத் தீர்மானத்தின் அடிப்படையில் கடைகளுக்கான மாதாந்த மதிப்பீட்டு வாடகையில் 40 சதவீதம் படி அறவிடப்பட்டிருந்தது.

### 2.2.3 அனுமதிப் பத்திரக் கட்டணம்

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணங்களை அறவிடவேண்டிய வியாபார நிறுவனங்களை இனங்காண்பதற்காக வருட ஆரம்பத்தின் போது வியாபார அனுமதிப்பத்திர மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1988 இன் 56 மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க அதிகாரச்சட்டங்களிலிருந்து திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற வியாபாரங்கள் தொடர்பாக பரிசோதனையின் மூலம் இனங்காண்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 170,350 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 1,542,150 |

### 2.3 செயற்பாடற்ற மற்றும் குறைந்த பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

(அ) இரானுவ செயற்கடமைகளுக்காக எடுத்துச் செல்லப்பட்டு மீளவும் 2008 மார்ச் 18 ஆந் திகதி சபைக்கு மீளக் கையளிக்கப்பட்ட கப் வாகனத்தை பழுதுபார்ப்பதற்கோ அல்லது பொருத்தமான பிரகாரம் விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாமல் அத்தினம் தொடக்கம் செயற்பாடற்று சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2005 மார்ச் 01 ஆந் திகதி பண்டாரவெல பிரதேச சபையிலிருந்து வழங்கப்பட்ட முச்சக்கர வண்டி, பிக்கப் வாகனம் 2012 மார்ச் மாதம் தொடக்கம் எவ்வித பயன்பாட்டிற்கும் ஈடுபடுத்தப்படாமல் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) சபைக்குச் சொந்தமான இரண்டு கடைகளும், மண்டபமும் மற்றும் சமயலறையுடன் உள்ள 2 வீடுகளும் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

## 2.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) சபையில் சேவையாற்றி இடமாற்றலாகிச் சென்ற மற்றும் மரணித்த 09 ஊழியர்களிடமிருந்தும் அறவிடவேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 25,407 தொகையான ஊழியர் கடனை அறவீடு செய்வதற்கு தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 1:4 மற்றும் 6 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 32(2) ஆம் பிரிவு மற்றும் 1990 இன் 28 ஆம் இலக்க மாகாண சபைகள் திருத்த அதிகாரச்சட்டத்தின் 32(2)(அ) பிரிவின் பிரகாரம் ஊவா மாகாண ஆளுநரினால் ஊவா மாகாண அரச சேவை ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்ட பிரதேச சபைகளின் கனிஷ்ட ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் அதிகாரம் 2005 ஏப்ரல் 21 ஆந் திகதி ஊவா மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் தலைவரினால் உள்ளூராட்சி ஆணையாளரின் முன் அங்கீகாரத்துடன் ஆட்சேர்க்கும் நடைமுறை மற்றும் சுற்றுநிருப ஆலோசனையின் பிரகாரம் அமுல்படுத்துதல் பிரதேச சபையின் செயலாளருக்குக் கையளிக்கப்பட்டிருந்தது. இந்த அதிகாரங்களை விஞ்சி பிரதேச சபையின் தலைவரினால் 2011 ஒக்தோபர் 21 ஆந் திகதி நாட்கூலி அடிப்படையில் நூலக உதவியாளர் பதவிக்கு ஊழியர் ஒருவர் சேர்க்கப்பட்டு அத்திகதி தொடக்கம் 2013 பெப்ரவரி மாதம் வரை பிரதேச சபை நிதியத்திலிருந்து ரூபா 188,862 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.5 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) ஒப்பந்த நிருவாகம்